[7th March 1958

SRI A. GOVINDASAMY : ஹரிஜனங்களோடு பிற்பட்ட இனத்தையும் சேர்த்திருப்பதால் ஆதித்திராவிடர்களுக்குள்ள பணம் பிற்பட்ட இனத்தவருக்கு கொடுக்கப்படுவதாக ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. ஆகவே, அவைகளை தனித்தனி இலாகாவாக பிரிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அப்படி தவறான எண்ணம் இருப்பதாகத்தெரியவில்லை. அங்கத்தினருக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிறதோ இல்லையோ என்று எனக்குத் தெரியாது. ஹரிஜனங்கள், பின்தங்கிய மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

SRI S. NAGARAJA MONIGAR : ஜாதிகள்கூடாது, என்றும் உயர்வு தாழ்வு கூடாது என்றும் மக்களிடையே எண்ணம் இருக்கிறது. ஆனால் சலுகை கிடைக்கிறபோது நான் இன்ன ஜாதி, நான் இடையன், குறும்பன் என்றெல்லாம் தாழ்ந்த ஜாதியாக எழுதிக்கொடுக்க ஆசைப்படுகிறார்களே, இதற்கு என்ன பரிகாரம் என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அது, அவர்களுக்குத்தான் தெரியும்.

SRI A. V. P. ASAITHAMBI : பின்னிலை ஜாதியாரில் கிராமணியார், சாணார், இருக்கிறார்கள், ஆனால் நாடார் என்பவர்கள் முன்னிலை ஜாதியில் இருக்கிறது. மூன்று பேர்களும் ஒன்றுதான். ஆனால் அதில் இரண்டு பேர்கள் உடையவர்கள் பின்னிலை ஜாதியார் என்றும் ஒரு பேர் உடையவர்கள் முன்னிலை ஜாதியார் என்றும் இருக்கிறார்கள். சலுகைகள் பெற சர்ட்டிபிகேட் வாங்கும்போது, சாணார் என்றோ, நாட்டார் என்றோ, கிராமணியார் என்றோ அதை எப்படி அறிந்து சர்டிபிகேட் கொடுக்கிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN: பெற்றோர்கள் என்ன சமுதாயம் என்று சொல்கிறார்களோ அதைக் குறிப்பிட்டு சர்டிபிகேட் கொடுப்பார்கள்.

1-20 p.m. SRI M. P. SUBRAMANIAM : ஸர், பின் தங்கிய சமூகத்தினர், முற்போக்கு வகுப்பினர் என்று இருப்பதை மாற்றி, கல்வித் துறையில் பொருளாதார துறையில் கீழ்தட்டில் உள்ள எல்லா பிள்ளைகளுக்கு ஒரே விதத்தில் கல்வி சலுகை அளிக்கவேண்டுமென்ற ஒரு எண்ணம் அரசாங்கத்தில் இருப்பது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN : ஆமாம்.

Intensive Manuring Scheme

* 234 *Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Coimbatore District Planning Advisory Committee has recommended recently that the dry-crop growers should be given loans under the Intensive Manuring Scheme just as the growers of sugarcane and paddy; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government have not considered it necessary to grant loans to dry-crop growers under the Intensive Manuring Scheme at present.